

# சிறந்த ஒத்தியைபிற்கான எட்டு விடயங்கள்

Q-0923 TM

**Tamil**

*பெற்றோர் வழிகாட்டல்*
அடையாளம் Knut Helskog எழுதிய ”ஆல்தாவிலுள்ள புராதன கல்வெட்டுக்கள்” புத்தகத்திலிருந்த பழைய கல்லில் செதுக்கப்பட்ட வடிவங்களை இயற்பண்புக்கேற்ப மாற்றி பெறப்பட்டது

*பெற்றோர் அறிவுறுத்தல் நிகழ்ச்சி நிரல்*
இக்கையேடு பெற்றோர்வழிகாட்டல் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையதாகும் சிறுவர் குடும்பநல திணைக்களத்தின் ஆதரவுடன் இக்கையேடு வெளியிடப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு www.foreldreveiledning.dep.no இனை பார்க்கவும் உள்ளடக்கத்திற்கு படைப்பாளியே பொறுப்புடையவர்.


அரச ஸ்தாபனங்கள் எழுத்திலான விடயங்களை கீழ்குறிப்பிடட் முகவரியில் பதிவு செய்யலாம்:
Statens Forvaltningstjeneste
Informasjonsavdeling
Postboks 8169 Dep, 0034 Oslo
Fax 22 24 27 86
e-post: publikasjonsbestilling@ft.dep.no
Vev: http:/odin.dep.no/odin/norsk/best_publ/index-b-n-a.btml
எப்போதும் பதிவிலக்கத்தை குறிப்பிடவும்.
தனியார் எழுத்திலான விடயங்களை கீழ்குறிப்பிட்ட இடங்களில் பெறலாம்:
Akademika, Mollergt.17
Postboks 8134 Dep, 0033 Oslo
கட்டணமற்ற தொலைபேசி இல: 800 80 960 அல்லது தொலைநகல் 22 42 05 51
மின்னஞ்சல்: offpubl@sio.uio.no/akal/offentlige_publikasjoner.htm
வீடியோக்கள் DVD ஆகியவற்றை (தனியார்: அரசஸ்தாபனங்கள்) கீழுள்ள இடத்தில் வாங்கலாம்:
Akademika, Mollergt.17
Postboks 8134 Dep, 0033 Oslo

கட்டணமற்றதொலைபேசி இல: 800 80 960 அல்லது தொலைநகல் 22 42 05 51
மின்னஞ்சல்: offpubl@sio.uio.no/akal/offentlige_publikasjoner.htm
அத்துடன் விடயத்தின் ஒருபகுதியை இணையத்தளத்தில் படியிறக்கம் செய்யலாம்.
பதிவிலக்கம்: Q-0923


***பெற்றோருக்கான வழிகாட்டல் ICDPS***
ICDPs ஒரு நோர்வேயிய தர்ம ஸ்தாபனம். இது பிள்ளைகளுக்கும் பராமரிப்பு வழங்குபவர்களுக்குமான உதவிகளை மேம்படுத்துவதற்கு சர்வதேச ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்களுடன் இணைந்து பணிபுரிவதுடன் வெவ்வேறு பாவனையாளர் குழுவினருக்கும் பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடு செய்கிறது. மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:


ICPDP, Postboks 15, 1321 Stabekk
Telefon 67 51 67 07, fax 67 51 67 01, e-post icdp@icdp.no



வடிவமைப்பு: pippip Design
படம்: InterMedia, Johs Boe og Lavasir Nordrum
அச்சகம்: www.kursiv.no

சிறந்த ஒத்தியைபிற்கான இவ்விடயங்களை தயாரித்த போது இயன்றவரை இலகுவாகவும் பொதுவாகவும் வெவ்வேறு வயதுடையவர்களுக்கு ஏற்றபடியும் ஒருவருக்குரிய முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் கருத்தில் கொண்டு தயாரித்துள்ளோம். பராமரிப்புவழங்கும் ஒருவர் எவ்வாறு பிள்ளையை பற்றி அறிந்துள்ளார் என்பதும் எவ்வாறு அன்பு செலுத்துகிறார் என்பதும் கலாச்சாரங்களிடையேயும் தனிமனிதர்களிடையேயும் வேறுபடலாம்.

விடயங்கள் சம்பாசணைக்குரியவையாகவும் மேற்கோள்காட்டுபவையாகவும் ஒருவர் இயற்கையாக அன்பு செலுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் கருத்துக்களை பரிமாறவும் பிள்ளையின் அநுபவங்களை விரிபடுத்தவும் சரிபடுத்தவும் மாற்றவும் அன்பான முறையில் ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டவையாகும். இவ்விடயங்களின் உள்ளடக்கம் சகலருக்கும் கிடைத்திருக்கு கூடிய அநுபவங்களாகும். இதில் புதிய விடயங்கள் மிக சில, இருப்பினும் இவ் அநுபவங்கள் சிறந்த கவனிப்புக்கு பிரதானமாகும். இச்சிறந்த ஒத்தியைபிற்கான விடயங்கள் பின்பற்றபட வேண்டும் என்னும் அர்த்தத்தில் கூறப்படவில்லை, அவசரம் நிறைந்த நாளாந்த வாழ்வில பெரும்பாலான பெற்றோர் ஏற்கனவே பெற்றிருக்கும் அநுபவங்களை் ஊக்குவிப்பதும் நினைவு படுத்தவதற்குமேயாகும்.

இவ்விடயங்கள் பற்றி ஆபிரிக்கா, லத்தின்அமெரிக்கா மற்றும் பலதரப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் கலாச்சார தொடர்புகளின் பின்னணியில் ஆராய்ந்த பின்பு, பொதுவான அநுபவங்களை பெரும்பாலனவர்கள் மீள அடையாளம் காண்பதுடன் வெவ்வெறு வயது பிள்ளைகளை பராமரிக்கும் போது முக்கியமானவை எனவும் உணர்கின்றனர் என்பதைக் காண்கிறோம்.

Karsten Hundeide
ஓஸ்லோ பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர்

1





### *1. பிள்ளையில் சந்தோசமாக -அன்பாக இருப்பதை வெளிக்காட்டவும்.*

பிள்ளையின் திடமான மனபாங்கிற்கு நீங்கள் அன்பாக இருக்கிறீர்கள் என்பதும் பிள்ளையை தடவி மகிழ்வையும், ஈடுபாட்டை வெளிபடுத்துவம் அவசியம். நீங்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளாத சிறுகுழந்தைகள் கூட மகிழ்வு, கவலை, அலட்சியம் மற்றும் பாசம் போன்ற உணர்வு ரீதியான வெளிப்பாடுகளை விளங்கிக் கொள்வார்கள்.

இதனை பல வழிகளில் செய்யலாம், இது வயதிற்கு ஏற்ப மாறுபடும்.

- புன்சிரிப்பு மற்றும் சேர்ந்து சிரித்தல்
- கட்டிப்பிடித்தல், முத்தமிடல்
- தடவுதல்.
- வேடிக்கை காட்டிச் சிரித்தல்
- சாதாரண, அன்பான தொனியில் உரையாடல்
- பிள்ளையில் அன்பாக இருப்பதாக இயற்கையான போது கூறவும்.

### *வினாக்கள்*

A. இதனை நடைமுறையில் எவ்வாறு செய்யலாம் உதாரணங்கள் தருக. உங்கள் பிள்ளை எப்படி நடந்து கொள்கிறது?

B. நெருக்கமானவர்களிமிருந்து அலட்சியத்தையும் மறுத்தலிப்பையும் எப்போதும் பெறும் பிள்ளை எப்படி நடந்து கொள்ளும் ?

C. உங்கள் பிள்ளையின் எக் குணாம்சங்களை நீங்கள் மதிக்கிறீர்கள் ?

D. உங்கள் பிள்ளையை எப்படி சந்தோசப்படுத்துவீர்கள் ?




## 2.*பிள்ளையின் செயற்பாட்டிற்கு ஏற்ப உங்களை மாற்றி அவதானிக்கவும்.*

நீங்கள் பிள்ளையுடன் இணைந்து கொள்வதற்கு அதன் விருப்பங்கள், செயற்பாடுகள், அதன் நிலைமை, உணர்வுகள், உடல் சைகை மூலம் எதை உணர்த்துகிறது என்பதிலும் கவனம் செலுத்துதல், பிள்ளை ஆர்வம் காட்டும் விடயத்திலும் அதற்கு தகுந்தபடி மாற்றிக் கொள்வதும் அவசியமாகும் இதன் மூலம் பிள்ளை தன்னை நீங்கள் கவனிப்பதாகவும் தன்னுடைய ஆர்வத்திற்கு பதலிலளிப்பதாகவும் உணரும்.

பிறர் திணிக்கும் முயற்சிகளுக்கு பதிலாக குறிப்பிட்ட வரையறைகளுக்குள் தனது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவது பிள்ளையின் முன்னேற்றத்திற்கு அவசியமாகும், நீங்கள் அதிக ஆர்வத்துடன் பிள்ளையை விட ”ஒரு படி மேல்” செயற்படாமல் பார்க்கவும் பிள்ளை சுயமாக ஆரம்பிப்பதற்கு உரிய நேரத்தை வழங்கவும்.

- பிள்ளையின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்
- பிள்ளையின் முயற்சிகளையும்/திட்டங்களையும் ஏன் செய்கிறது என்பதையும் கவனிக்கவும்.
- பிள்ளை என்ன செய்கிறது, என்ன விரும்புகிறது என பார்க்கவும்.
- பிள்ளையின் சைகையை புரிந்து கொள்ளவும்.
- பிள்ளையின் விருப்பத்தையும் உணர்வையும் ஊகிக்கவும்.
- பிள்ளைக்கு ஏற்ற செயற்பாடுகளில் ஈடுபடவும்.
- பிள்ளையின் முயற்சியில் ஆர்வம் காட்டவும்.

### *வினாக்கள்*

A. இதனை நடைமுறையில் எவ்வாறு செய்யலாம் உதாரணங்கள் தருக
B. பிள்ளையின் செயற்பாட்டினை அவதானித்து நீங்கள் அதற்கு ஏற்றபடி மாற்றும் போது பிள்ளை எவ்வாறு நடந்து கொள்கிறது?
C.தனது செயற்பாடுகளுக்கு மிக அரிதாக பதில் கிடைக்கும் பிள்ளை எவ்வாறு நடந்து கொள்ளும் ?
D.பிள்ளையின் உணர்வையும் அதன் நிலையையும் பிள்ளையின் சைகை மூலம் எப்படி கண்டறிவீர்கள்?




### *3.பிள்ளை ஆர்வம் காட்டுபவைகள் பற்றி உரையாடி "உணர்வு ரீதியான" உரையாடலை ஏற்படுத்த முயற்சிக்கவும்*

குழந்தை பிறந்து குறுகிய காலத்தில் உணர்வுரீதியான உரையாடல்களை கண்களைபார்த்தல், சிரிப்பு மற்றும் சைகை மகிழ்ச்சி என்பவற்றை பரிமாறுவதன் மூலம் ஏற்படுத்தலாம் பராமரிப்பவர் பிள்ளையின் முயற்சிகள் பற்றி நல்லது என பராட்டும் போது பிள்ளை சந்தோசமாக "பதில்"சத்தம் வழங்கும். இந்த ஆரம்ப கால உணர்வுபூர்வமான "உரையாடல்கள்' " பிள்ளை எதிர்காலத்தில் பிறருடன் பழகுவதற்கும் மொழி வளர்ச்சிக்கும் அவசியமாகும்.

பெரிய குழந்தைளுக்கும் நெருக்கமான உரையாடல் மூலம் தொடர்புகள் ஏற்படுத்தப்படுவது அவசியம். இதன் மூலம் நம்பிக்கை ஏற்படுத்தப்படுவதுடன் தனிப்பட்ட விடயங்கள் பற்றி உரையாட முடிகிறது. பெரிய பிள்ளைகளின் கேள்விகளை ஆறுதலாக கேட்பதன் மூலம் அவர்கள் ஆர்வம் காட்டும் விடயங்கள் பற்றி உரையாடலை ஏற்படுத்தலாம்.

- நெருக்கமான உரையாடல்
- நெருங்கிய தொடர்பு
- "இரகசியங்களை" பகிர்தலும் பரிமாறுதல்
- கண்கள் சந்தித்தல்
- உடல் சைகை மூலம்தாளஅசைவு ஏற்படுத்தல்
- பார்த்து செய்யதலும் நல்ல சைகைளை பரிமாறுதல்
- இருவரும் மனந்திறந்த உரையாடல் மூலம் உணர்வுகள் சொல் மற்றும் சிந்தனைகளை பரிமாறிக்கொள்ளல்

#### *வினாக்கள்*

A. இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என உதாரணம் தருக

B. வெவ்வேறு வயதுடைய பிள்ளைகளுடன் உணர்வு ரீதியிான உரையாலை நிகழ்த்தும் போது எவ்வாறு அமையும் (சிசு, 3 வயது 8 வயது 13 சிறுமி 16 வயது பையன்)

C. நெருக்கமான தொடர்பும் மற்றவர்களை நம்பி பழகலாம் என்ற அன்பும் மிகவும் அரிதாக கிடைக்கும் பிள்ளை எவ்வாறு தன்னை விருத்தி செய்து கொள்ளும்?

D.துரிதமாக இயங்கும் நாளாந்த வாழ்வில் எவ்வாறு நீங்கள் பிள்ளையுடன் தனியாக நேரத்தை செலவிட்டு சந்தோசமான சூழலை உருவாக்க முடியும்?




## *4 பிள்ளையால் செய்யமுடிந்தவற்றையிட்டு உற்சாகப்படுத்தி ஏற்றுக் கொள்ளவும்*

பிள்ளையின் தன்னம்பிக்கை, விடாமுயற்சியையும் வளர்த்துக் கொள்வதற்கு பிள்ளைக்கு சுயபெறுமதி, உணர்வுகள் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். நல்லது என உற்சாகப்படுத்துதல் அல்லது நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளும் தன்மையுடன் நடந்து கொள்வதன் மூலம் பிள்ளை தனது நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியது என திடம் கொள்கிறது.

பிள்ளை நல்ல விடங்களை செய்யும் போது யாராவது ஒருவர் பிள்ளையை பாராட்டுவது முக்கியம் அத்துடன் ஏன் அது சிறந்தது என்பதற்கான விளக்கத்தையும் கொடுக்கவேண்டும். இதன் மூலம் பிள்ளை ஒரு யதார்தமான தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும்.

| ***பாருங்கள் மற்றதை:*** | ***கதைத்து உறுதிப்படுத்தல்*** |
| --- | --- |
| • பார்வைத்தொடர்பு | பராட்டுதல் |
| • சிரிப்பு | இது நல்லது அழகானது |
| • பதிலாக சந்தோசமாக தடவுதல் | நீங்கள் இப்படி செய்தது நல்லது .... ஏன்பதுடன் அதற்கான காரணத்தையும் விளங்கப்படுத்தல் |

### *வினாக்கள்*

A. இதனை எவ்வாறு நடைமுறைபடுத்தலாம் என்பதற்கு சில உதாரணங்கள் தருக

B பிள்ளை நல்லது செய்யும் போது நீஙகள் மேலும் உற்சாகப்படுத்தினால் பிள்ளை எவ்வாறு நடந்து கொள்கிறது?

C. மிகவும் அரிதாக உற்சாகப்படுத்தலைப் பெறும் பிள்ளை எவ்வாறு நடந்து கொள்ளும்?

D. சிசுவிற்கு எவ்வாறு உங்கள் விருப்பத்தை தெரிவிப்பீர்களா? தொடர்பு சந்தோசமாக இருக்கும் நேரங்கள் எவ்வாறிருக்கும்?




### *5. எல்லோரும் ஆர்வம் காட்டும் விடயத்தில் பிள்ளை தனது கவனத்தை செலுத்த உதவுவதன் மூலம் ஒரு விடயத்தையும் சூழலை பற்றியும் பொதுவான அநுபவத்தை பெறலாம்*

பிள்ளைக்கு தனது அவதானத்தை குவிப்பதற்கு உதவி தேவைப்படுகிறது. பிள்ளை ஒரு விடயம் பற்றியும் சூழல் பற்றியும் அவதானிக்க வேண்டுமானால் பிள்ளையைக் கூப்பிட்டு அதனை வழிநடத்துவதன் மூலமும் செய்யலாம். நீங்கள் இங்கே பாருங்கள் என கூறி பிள்ளைக்கு காட்ட விரும்பியதைக் காட்டலாம்

அல்லது பிள்ளை ஆர்வத்துடன் செய்து கொண்டிருக்கும் விடயத்தில் நீங்களும் ஆர்வமான இருக்கலாம் இதன் மூலம் இருவருக்கும் பொதுவான அநுபவத்தை பெறலாம். பொதுவான அநுபவங்கள் இல்லாவிடில் விடயங்கள் பற்றியும் சூழல் பற்றியும் கதைப்பது கடினமானகும். அநேகமாக பிள்ளை ஒரு விடயத்திலும் பெற்றோர் வேறொர் விடயத்திலும் ஆர்வமாக இருப்பதைக் காணலாம். சிறந்த தொடர்பையும் உரையாடலையும் ஏற்படுத்த இருவருக்கும் ஒரேவிடயம் மீதான கவனக் குவிப்பு முக்கியமாகும்.

- பொதுவான கவனத்தை பிரதானப்படுத்துவதன் மூலம் பிள்ளையின் கவனத்தை அவதானித்தல் மற்றும் பிள்ளையின் பார்வை எங்கே போகிறது என்பதை அறிந்து அது எதில் ஆர்வமாகவுள்ளது என கண்டறியலாம்.
- பிள்ளையின் கவனம் எங்கே என அவதானிப்பதன் மூலம் பிள்ளையின் கவனத்தை சரியான விடயம் மீதும் விபரங்கள் இயல்புகள் மூலம் பொதுவான ஆர்வத்தை உருவாக்கலாம்.

***வினாக்கள்***

A. பிள்ளை தனது கவனத்தை குவித்து இருவரும் ஒரே அநுபவங்களைப் பெறுவதற்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள் உதாரணம் தருக.

B. உங்கள் பிள்ளை எவ்வாறு நடந்து கொள்கிறது?

C. எந்நேரமும் மனரீதியான கவனிப்பின்றிய மிகவும் அரிதாக கவனத்தை குவிப்பதற்கு உதவி கிடைக்கும் பிள்ளை எவ்வாறு தன்னை விருத்தி செய்யும்?

D நீங்களும் உங்கள் பிள்ளையும் இருவரும் ஒன்றாக நேரத்தை ஒதுக்கி பொதுவான ஒரு விடயம் பற்றி கவனத்தை குவித்து ஆர்வம் காட்டும் விடயம் இருக்கிறதா?




***6. நீங்களும் பிள்ளையும் சேர்ந்து அநுபவிக்கும் சூழவுள்ள விடயங்கள் பற்றி பிள்ளைக்கு விபரிப்பதன் மூலம் பிள்ளையின் அநுபவங்களுக்கு அர்த்தத்தை ஏற்படுத்துவதுடன் உணர்வையும் ஆர்வத்தையும் காட்டுங்கள்.***

விபரித்தல் என்பது பெயர் வழங்குவது, எவ்வாறு இயங்குகிறது என்பதைக் காட்டுதல், அதேநேரம் நீங்கள் ஒன்றாக சேர்ந்து அநுபவிக்கும் விடயங்கள் பற்றி உணர்வை வெளிக்காட்டுங்கள். இதன் மூலம் அநுபவங்கள் மனதில் பதிபவையாகவும் பிள்ளையிற்கு பெறுமதிக்க மிக்கவையாகவும் நினைவில் இருக்கும்.

பிள்ளை தான் வசிக்கும் சூழலில் இருக்கும் விடயங்களை பார்ப்பதும் அதனை பயன்படுத்துவதும் மட்டும் போதுமானதல்ல. பிள்ளை அதன் கருத்தை தெரிந்திருக்க வேண்டுமாயின் அதற்கு அது பற்றிய விளக்கம் தேவைப்படுகிறது இதன் மூலம் உலகம் பெறுமதியும் கருத்தும் மிக்கதாக பிள்ளைக்கு அமையும்.

- நீங்கள் நேர்ந்து அநுபவிக்கும் விடயங்கள் பற்றி பிள்ளையுடன் உரையாடுங்கள்
- நீங்கள் பார்ப்பதன் பெயரை கூறி அதனை விபரித்துக் கூறுங்கள்
- அது எவ்வாறு செயற்படுகிறது எனகூறுங்கள்
- நீங்கள் இருவரும் சேர்ந்து அநுபவிக்கும் விடயங்கள் பற்றி ஆர்வமும் ஈடுபாடும் காட்டுங்கள்.

***வினாக்கள்***

A. இதனை எவ்வாறு நடைமுறையில் செய்யலாம் என்பதற்கு உதாரணங்கள் சில தருக
B. அநுபவங்கள் பற்றி யாரும் விபரிக்காத பிள்ளை எவ்வாறு நடந்து கொள்ளும் ?
C. வேறுபட்ட வயதுடைய பிள்ளைகளுக்கு கருத்துக்களை எவ்வாறு விளக்கலாம் ?
(சிசு,3வயது,14 வயது சிறுமிக்கு)




### *7. நீங்கள் பிள்ளையுடன் சேர்ந்து பார்ப்பவை பற்றி விளக்கி கூறவும்.*

பிள்ளை உலகை புரிந்து கொள்வதற்கு தனது விளங்கிக் கொள்ள அறிவை விருத்தி செய்ய, யாராவது பிள்ளைக்கு வரலாறுகளை சொல்லுவதுடன் ஏன் எவ்வாறு நடைபெறுகிறது என்பது பற்றிய விளக்கங்களையும் கூறவேண்டும். சிறுபிள்ளை முன்பு பார்த்து அநுபவித்த விடயங்களை ஒப்பிட்டு விளக்குவதன் மூலம் பிள்ளையின் அநுபவங்களை புரிந்து கொள்ளும் தன்மையை வளர்க்கலாம். நாங்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றது நினைவில் இருக்கிறதா அப்போது நாங்கள் இதை பார்த்தோம் என்பன போன்றவை

பிள்ளை வளர்ந்ததும் ஒருவர் வரலாறுகளை சொல்லலாம் விளங்கங்களை வழங்கலாம் வினாக்களை வினவலாம் ஒற்றுமை வேற்றுமைகளை கண்டறியலாம். இவ்முறையின் மூலம் நாம் பிள்ளை அவ்வேளை அநுபவிக்கும் விடயங்களைத் தவிர மேலதிகமாக விளக்கங்களை வழங்குகிறோம். இது பிள்ளையின் மூளைவளாச்சிக்கு அவசியமாகும்.

- விளக்கங்களை கூறவதுடன் ஏன் நடைபெறுகிறது என்ற காரணங்களை கண்டறியவும்
- வேவ்வேறு அநுபவங்களிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிடுக
- இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்குமான தொடர்பைக் கண்டறியவும்
- ஒருவரின் அநுபவங்கள் பற்றி கதைகள் உருவாக்கி கூறவும் படங்கள், அடையாளங்கள் மூலம் மிகைப்படுத்தி காட்டவும்

### *வினாக்கள்*

A. இதனை எவ்வாறு நடைமுறையில் செய்யலாம் என்பதற்கு உதாரணம் தருக

B. ஒருவயது பிள்ளையின் அநுபவங்களை சூழலிலுள்ளவற்றைக் கொண்டு எவ்வாறு மேம்படுத்தலாம்? சூழல் பற்றிய 7 வயது பிள்ளையின் அநுபவங்களை எவ்வாறு விரிவுபடுத்தலாம்?

C. ஏன்ன நடக்கிறது என்பது பற்றிய விளக்கத்தை மிக அரிதாகப் பெறும் பிள்ளை எவ்வாறு தன்னை விருத்தி செய்து கொள்ளும் ?

D. மிகவும் அவசரமான நாளாந்த வாழ்வில் உங்கள் பிள்ளை கேட்கும் கேள்விகளுக்கு விளக்கமளிக்கிறீர்களா?




***8. உங்கள் பிள்ளைக்கு ஒழுங்குவிதிகளை நல்ல முறையில் விதிப்பதன் மூலம் பிள்ளை தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள உதவுங்கள் அத்துடன் சிறந்த மாற்றுவழிகளை சேர்ந்து திட்டமிடுங்கள்***

சுயகட்டுப்பாட்டையும், திட்டமிடும் திறமையை தெரிந்து கொள்ள பிள்ளைக்கு பயிற்சி தேவை. இது பராமரிப்பு வழங்கும் நபருக்கும் பிள்ளைக்கும் இடையேயான ஒத்தியைபு மூலம் படிபடிப்படியாக நிகழ்கிறது. பிள்ளையின் முயற்சியை நான் முற்றாக எடுத்துக் கொள்ளாமல் நல்ல வழியில் பிள்ளைக்கு வழி காட்ட வேண்டும். பிள்ளை காரணம் எதுமின்றி அழுதால், சுயநலமாகவும், சாதாரணமாக விதிமுறைகளை மீறினால், பராமரிப்பு வழங்குபவர் தலையிட்டு நல்ல முறையில் கட:டுப்பாடுகளை விதிப்பதுடன் அவற்றை ஏன் செய்யமுடியாது என்பதை விளக்கவும்.

எப்போதும் கூடாது என கட்டுப்பாடு விதிப்பதற்குப் பதிலாக பிள்ளைக்கு நல்ல முறையில் விதிமுறைகளை கற்றுக் கொடுப்பதுடன் எவற்றை செய்ய அனுமதி இருக்கிறது என்பதை காட்டிக் கொடுக்கவும். பிள்ளையுடன் சேர்ந்து அவற்றை செய்யவும். பிள்ளைகள் அநேகமாக குழப்படி செய்வதற்கு காரணம பெற்றோரின் கவனத்தை பெறுவதற்கே.

- பிள்ளைக்கு ஏற்றவாறு விளையாட்டுகளை ஒழுங்கு படுத்தவும்
- எப்படி செய்யலாம், சுட்டிக்காட்டல், பெயர் குறிப்பிடல், என்ன செய்யலாம் என்பவை மூலம் பிள்ளையின் முயற்சிக்கு வழிகாட்டுதல்
- படிப்படியாக திட்டமிட உதவுதல்
- பிள்ளைக்கு உதவி தேவைப்படின் உதவி ஆதரவு வழங்கவும்- பிள்ளையால் செய்யமுடியும் போது விலகிக் கொள்ளல், இதன் மூலம் பீள்ளை தன்னால் சுயமாக செய்யமுடியும் என்ற அநுபவத்தை பெறும்
- பிள்ளை தனக்கு தெரிந்தவற்றை பயன்படுத்தி செய்ய கூடிய விளையாட்டுக்களை வழங்குதல்
- எவற்றை செய்யலாம் என்பது பற்றி நல்ல முறையில் கட்டுபாட்டு விதிகளை ஏற்படுத்தவும். ஏவற்றை செய்யலாம் செய்யக் கூடாது என்பது பற்றி பிள்ளையுடன் உடன்பாட்டை ஏற்படுத்தவும்.
- பிள்ளைக்கு அனுமதி மறுக்கப்படும் விடயம் பற்றி விளக்கமளிக்கவும் பிள்ளை பிழையாக செய்யும் போது மாற்று முயற்சிகளை செய்வதன் மூலம் கவனத்தை திருப்பவும்.

***வினாக்கள்***

A. எவ்வாறு இதனை நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கு உதாரணம் தருக

B. அரிதாக வழிகாட்டலையும் விதிமுறைகளையும் பெறும் அல்லது வழிகாட்டலின் போது கட்டளைகளை வழங்கும் போது பிள்ளை எவ்வாறு நடந்து கொள்ளும் ?

C. மிகவும் ஆத்திரமான நிலைமைகளில் ”கூடாது” என்று சத்தமிடுவதும் கோபடைவதும் இலகுவானது வேறு எவ்வாறான சிறந்த முறைகளில் ஒழுக்க விதிகளை ஏற்படுத்தலாம்?

## *பெற்றோர் அறிவுறுத்தல் நிகழ்ச்சி நிரல்*

*பெற்றோர் தமது பிள்ளைகள் பற்றிமிகவும் தெரிநதவர்கள் .இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வெவ்வேறு அநுபவங்களை பாதுகாப்பதுடன் இதனை பலப்படுத்தி வளர்த் தொடர்ந்து கடடத்துவது அவசியமாகும்*

*பெற்றோர் அறிவுறுத்தல் நிகழ்ச்சி நிரல் திட்டத்தின் நோக்கம் பெற்றோர் சந்தித்து தமது அநுபவங்களை பரிமாறிவதுடன் பிள்ளை வளர்ப்பு பற்றிய கேள்விகளை கேட்பதுமாகும். விடயங்களுக்குரிய சந்திப்புக்கள் மிகவும் பலனுள்ளவை. பெற்றோர் தமது நாளாந்த விதிமுறைகளை வகுத்துக் கொள்வர். நாம் அங்கீகாரம் பெற்ற நிபுணர்கள் புத்தங்கள், அறிவுறுத்தல் கையேடுகள், விடயக் கையேடுகள், வீடியோக்கள் மற்றும் டிவிடி. நீங்கள் கையில் வைத்திருக்கும் இக் கையேடு உளவியல் பேராசிரியர் Karsten Hundede என்பவரால் எழுதப்பட்டது. பெற்றோர் எதிர்நோக்கும் பல விடயங்கள் பற்றிய பல வெளியீடுகள் வெளிவந்துள்ளன அவற்றில் இதுவும் ஒன்று. இவ் வெவ்வெறு கையேடுகள் மற்றம் வீடியோக்கள் வெளிவருவதுடன் நகரசபையின் பிரிவுகளுக்குள் எழுத்துமூலமான வெளியீடுடன் சம்பந்தப்பட்ட வெவ்வேறு முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உங்கள் அயலில் எவ்வாறான முயற்சிகள் நடைபெறுகின்றன என்பது பற்றிய விபரங்களை சுகாதாரநிலையம், பாலர்பராமரிப்பகம், மற்றும் பாடசாலை போன்றவற்றில் பெற்றுக் கொள்ளலாம். பெற்றோர் அறிவுறுத்தல் நிகழ்ச்சி பற்றிய மேலதிக விபரங்களுக்கு பார்க்கவும் www.foreldreveiledning.dep.no. இக்கையேட்டின் இலத்திரனியல் வடிவத்தையும் இங்கே பார்க்கலாம்.*